# அடிப்படையும் அறிமுகமும் (PART 3)

உண்மையில்,தோஷங்களே நோய்கள் தோன்றுவதற்குக் காரணமாகின்றன.இந்த தோஷமானது ரஸம்,ரத்தம் முதலான தாதுக்களைச் சார்ந்திருந்து நோயைத் தோற்றுவிக்கும் போது நாம் அதை " இந்த நோய் இதனால் உண்டானது, இந்த நோய் இரத்தத்தினால் உண்டானது" என்று சொல்கிறோம். இந்தக்கற்பனை வெறும் பேச்சளவிற்கே. உலகில் சூடான நெய்யால் ஒருவன் சுடப்பட்டபோது, "நெய் சுட்டுவிட்டது" என்கிறோம். உண்மையில் நெய் சுடுவதில்லை. நெய்யைச் சார்ந்திருந்த சூடுதான் அதை சுட்டது. எரிக்கும் சக்தி நெருப்பில் தான் உள்ளது, நெய்யில் இல்லை.

ரஸம் என்ற தாதுவின் காரியமானது பிரீணனம் - உடலைக் களிப்புறச்செய்தல்; அதாவது மனம் மலர்ந்திருத்தல்.

ரத்தத்தின் செயல் - ஜீவனம் ( பிழைத்திருத்தல்).

மாமிசத்தின் செயல் - லேபம் (எலும்புகளின் மீது பூசப்படிருத்தல்).ஒருவகையான அடுக்கு நிலை. இதனால் எலும்புகளின் வெளித்தோற்றம் மறைக்கப்பட்டிருக்கிறது.

மேதஸ் என்பதின் செயல் ஸ்னேகம் - அதாவது உடலைப் பசையுள்ளதாக அமைத்தல்.

எலும்புகளின் செயல் - உடலைத்தாங்குதல், அதாவது உடலை நிமிர்ந்திருக்கச் செய்தல்.

மஜ்ஜா என்பதன் செயல் - உள்ளேயிருந்து எலும்புகளை நிரப்புதல்.

விந்துவின் செயல் - கர்பத்தைத் தோற்றுவித்தல்.

வாத பித்த கபங்களென்னும் மூன்று தோஷங்கள், ரஸம், ரத்தம் முதலான எழு தாதுக்கள் இவை வளர்தலுக்கும், குறைதலுக்கும் காரணமான தமக்குச்சமமான குணம் படைத்த பொருள்களால் வளர்சியடைகின்றன. இவற்றிற்கு எதிரிடையான குணங்களுள்ள பொருள்களால் குறைகின்றன.

இந்த ரஸம், ரத்தம் முதலானவை உடலைத்தாங்குகின்றன. அதனால் இவைகளுக்கு " தாது" என்று பெயர் வந்தது. ஒரு தாதுவுக்கு உணவு மற்றொன்று என்ற வகையில் தாதுக்கள் தமக்குத்தாமே உணவாகின்றன. ஒரு தாதுவினால் மற்றொன்று வளர்ச்சியடைகின்றது. இதில் முதல் தாது இரண்டாவது தாதுவிற்கு ஆகாரமாகின்றது. அதாவது ரஸதாது ரத்த தாதுவிற்கும், ரத்ததாது மாமிசதாதுவிற்கும் ஆகாரம். மாமிசம், மேதஸ் என்னும் தாதுவிற்கும், மேதஸ் - அஸ்தி(எலும்பு)க்கும் , அஸ்தி மஜ்ஜாவுக்கும், மஜ்ஜை சுக்ல( விந்து)த்திற்கும் முறையெ ஆகாரமாகின்றன.

தோஷங்கள், தாதுக்கள், மலம் போன்றவை அனைத்துக்கும் சமமான திரவியம், குணம், செயல் இவற்றால் வளர்ச்சியும், எதிரிடையான திரவியம், குணம், செயல் இவற்றால் குறைவுமுண்டாகும்.

உதாரணம்:
இரத்தக் குறைவை ரத்தத்தினால் நிரப்புவது.

மாமிசத்தை நிரப்ப மாமிசத்தையே உணவாகக்கொள்வது.

மேதஸ்ஸை மேதஸாலும், எலும்பை இளம் எலும்புகளையே உணாவாக ஏற்பதாலும், மஜ்ஜையை நிரப்ப மஜ்ஜயையெ உணவாகவும், விந்துவை நிரப்ப விந்துவை உத்பத்தி செய்யும் நெய் முதலியவற்றை சாப்பிடுவதன் மூலமாகவும் முடியும்.